# டிரினிடி மகளிர் கல்லூரி

நாமக்கல் - 637 002.

2023 – 2024 ஆம் கல்வியாண்டு ( ஒற்றைப் பருவம்)

முதுகலைத் தமிழிலக்கியம் முதலாமாண்டு

## தாள் : அற இலக்கியம் (19UFTA04)

## தலைப்பு : அகத்திணை


வழங்குபவர் :

முனைவர்.இரா.அ.அனிதா

உதவிப் பேராசிரியர்

தமிழாய்வுத்துறை

http://www.trinitycollegenkl.edu.in/

அறம் :

ஒரு மனிதன் மனிதனாக வாழத் தேவையான உறுதிப்பொருட்கள் நான்கு உண்டு. அவை, அறம், பொருள், இன்பம், வீடு என்பனவாகும். அறம் அல்லது ஒழுக்கநெறி என்பது ஒருவர் சமூகத்தில் எவ்வாறு நடக்க வேண்டும் என்பது தொடர்பான பார்வைகளைக் குறிக்கிறது. அறம் என்ற சொல்லுக்கு தர்மம், கடமை, புண்ணியம் எனப் பலபொருள் உண்டு.

## சங்கம் மருவிய இலக்கியங்கள் :

சங்கம் மருவிய கால இலக்கியங்கள், பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள், அற நூல்கள் , நீதி நூல்கள் என்பன எல்லாம் ஒன்றே.

சங்கம் மருவிய இலக்கியங்கள் கி.பி மூன்றாம் நூற்றாண்டு முதல் ஆறாம் நூற்றாண்டு வரையிலான களப்பிரர்களின் ஆட்சிக் காலத்தைச் சேர்ந்தது. இக்காலத்தை தமிழறிஞர்கள் இருண்ட காலம் என்கிறார்கள்.

## நீதி நூல்கள் :

தமிழ்மொழியில் நீதி நூல்களாகக் கருதப்படுபவை பதினெட்டு உள்ளன. இப்பதினெட்டு நூல்களும் பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் எனப்படுகின்றன. பதினெண் - 18, கீழ் - சிறிய, கணக்கு - நூல் = பதினெண்கீழ்க்கணக்கு.

பதினெண் கீழ்க்கணக்கின் இலக்கணத்தைக் கூற வந்த பன்னருபாட்டியல் ,

“அடிநிமிர் பில்லாச் செய்யுள் தொகுதி அறம்
பொருள் இன்பம் அடுக்கி அவ்வத்
திறம்பட உரைப்பது கீழ்க் கணக்காகும்”

என விளக்கம் உரைக்கிறது.

பதினெண்கீழ்க்கணக்கில் உள்ள நூல்கள் இவையிவை என்பதை,

“ நாலடி நாண்மணி நானாற்பது ஐந்திணை முப்
பால் கடுகம் கோவை பழமொழி மாமூலம்
இன்னிலைய காஞ்சியோடு ஏலாதி என்பவே
கைந்நிலைய வாங்கீழ்க் கணக்கு”

எனப் பழம்பாடல் ஒன்று கூறுகிறது.

இப்பதினெட்டு நூல்களுள் நாலடியார், நான்மணிக்கடிகை, திருக்குறள், திரிகடுகம், இன்னா நாற்பது, இனியவை நாற்பது, சிறுபஞ்சமூலம், ஏலாதி, ஆசாரக்கோவை, பழமொழி நானூறு, முதுமொழிகாஞ்சி ஆகிய பதினொரு நூல்கள் நீதி நூல்கள் ஆகும்.

ஐந்திணை ஐம்பது, ஐந்திணை எழுபது, திணைமொழி ஐம்பது, திணைமாலை நூற்றைம்பது, கார் நாற்பது, கைந்நிலை ஆகிய ஆறு நூல்கள் அகம் சார்ந்தவை. களவழி நாற்பது எனும் ஒரு நூல் மட்டும் புறம் சார்ந்தவை ஆகும்.

# நன்றி